## கூடுதல் தகவல்களை எங்கே அறிவது?

சார்பற்ற தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு விவரங்கள் SEND **நடைமுறை விதிகள்** பகுதி 2-இல் படிக்கலாம். வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் **உள்ளூர் நல்கைகள் செய்தி** இணையதளத்திலும் இந்த வழிகாட்டுதலைக் காணலாம்:

westsussex.local-offer.org. **அதன் பிறகு 'information tab' என்ற தாவலைக் கிளிக் செய்யவும்.**

**உள்ளூர் நல்கைகள் செய்தியில்**, தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு வழங்க **வெஸ்ட் சஸ்ஸெக்ஸ்** செய்துள்ள ஏற்பாடுகளின் விவரங்கள் இருக்கும்.

எங்கள் சேவைகளைப் பற்றிய விவரங்களை அறியவும், எங்கள் வெளியீடுகளின் நகல்களைப் பெறவும், தொடர்பு விவரங்களைக் காணவும், WS SEND IAS இணையதளத்தைக் காண்க.

ஒரு பெற்றோராக, பாதுகாவலராக, அனைத்தையும் நன்றாக அறிந்த நிலையில் நீங்கள் சொந்தமாக தேர்வுகளைச் செய்ய உதவும் தகவல்களை வழங்குவதே எங்கள் நோக்கம்.

நாங்கள் வழங்கும் சேவை, உங்கள் குழந்தையின் இலக்குகளைப் பற்றிய விவாதங்களில் பங்கேற்பதற்கும், முடிவுகளை எடுப்பதற்கும் தேவையான நம்பிக்கையைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவும். இது உங்கள் குழந்தையின் கல்வி, கவனிப்பு மற்றும் உடல்நலத்தில் நீங்கள் ஒரு செயல்திறமிக்க, நன்றாக அறிந்து கொண்டை பங்கை அளிக்க உங்களுக்கு உதவும்.

எங்களைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய மற்ற தகவல்கள்:

- வாரநாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை செயல்படும் ரகசியக்காப்பு உதவி தொலைபேசி எண் உள்ளது.
- குறிப்பிட்ட இடைவெளியில் வெளிவரும் செய்திமடல் உள்ளது, அதில் உள்ளூர் குழுக்கள் பற்றிய தகவல்கள், செயல்பாடுகள் விவரிக்கப்படும், மேலும் SEN கொள்கையில் செய்யப்படும் மாற்றங்கள் பற்றிய வழக்கமான அறிவிப்புகள் இருக்கும். இதன் விநியோகிப்பு பட்டியலில் நீங்களும் இணைக்கப்பட விரும்பினால், எங்கள் உதவி எண்ணை அழைக்கவும் அல்லது மின்னஞ்சல் அனுப்பவும்.
- 'PACE' போன்ற பெற்றோர்களுக்கு ஆதரவளிக்கும் நிகழ்வுகளையும் நடத்துகிறோம்.
- 'ரீச்சிங் ஃபேமிலிஸ்' என்ற அமைப்பின் மூலம் பெற்றோர்களுக்கு பயிற்சி வழங்குகிறோம்
- பெற்றோர்களுடன் தொடர்பு கொள்வது தொடர்பாக நிபுணர்களுக்கும் / தொழில்முறை பணியாளர்களுக்கும் பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்குகிறோம்.

## எங்களைத் தொடர்பு கொள்ள

**உதவி எண்:**

0330 222 8555

**அஞ்சல் முகவரி:**

SEND Information, Advice and Support Service

St James Campus St

James Road

Chichester

West Sussex

PO19 7HA

**மின்னஞ்சல் முகவரி:** send.ias@westsussex.gov.uk

**எங்கள் இணையதளங்களையும் நீங்கள் பார்க்கலாம்:**

https://westsussex.local-offer.org/services/7

SEND = சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும் உடல்குறைபாடு (Special Educational Needs and Disabilities)



West Sussex County Council

**எல்லா பெற்றோருக்கும் பாகுபாடற்ற தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் ஆதரவு சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதே WS SEND IAS இன் பங்காகும், இதன் மூலம் பெற்றோர், தங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளைப் பற்றிய தகவல் அறிந்த முடிவுகளை எடுக்க முடியும். பாதிப்பு உடைய குடும்பங்களுக்கு அவர்களுடைய சூழல்களில் உதவக்கூடிய தனிநபர்கள், சேவைகள் அல்லது ஏஜென்சிகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டால் தவிர WS SEND IAS உடன் பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள் ரகசியமாகவே வைக்கப்படும்.**

# மற்றும் ஆதரவு சேவை

## சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும்/அல்லது ஊனம் உள்ள குழந்தைகளின் பெற்றோர் கவனிப்பாளர்களுக்கான ஆலோசனையும் வழிகாட்டுதலும்



West Sussex County Council

www.westsussex.gov.uk

WS1108 09.16

## WS SEND IAS-இன் பங்களிப்பு

சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும்/அல்லது ஊனம் உள்ள குழந்தைகளின் பெற்றோர் மற்றும் கவனிப்பாளர்களுக்கு சார்பற்ற தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவை வழிகாட்டுதல் ஆகியவற்றை West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை வழங்குகிறது. பெற்றோர்கள், அவர்கள் குழந்தைகளின் பள்ளி, சமூக கவனிப்பு, உள்ளூர் நிர்வாகம், உடல்நலம் மற்றும் பிற அமைப்புகள் கூட்டாகப் பணியாற்றுவதே இந்தச் சேவையின் நோக்கமாகும்.

சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும்/அல்லது ஊனம் உள்ள அல்லது இருப்பதாக அடையாளம் காணப்படக்கூடிய குழந்தைகளின் பெற்றோர் மற்றும் கவனிப்பாளர்களுக்கு எங்கள் சேவை கிடைக்கும்.

## சார்பற்ற தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு என்பதன் பொருள் என்ன

சார்பற்ற தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு பற்றிய இந்தத் தகவல் SEND நடைமுறை விதிகளின்படி கோரப்படுகிறது.

### SEND நடைமுறை விதிகள் என்ன சொல்கிறது?

**குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் சட்டம் 2014**-இன் கூற்றுப்படி, குழந்தைகள், இளம்பருவத்தினர் மற்றும் பெற்றோர்களுக்கு, சிறப்புக் கல்வித் தேவைகள் (SEN), ஊனம் மற்றும் உடல்நல மற்றும் சமூக கவனிப்பு பற்றிய தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவை உள்ளூர் நிர்வாக அமைப்புகளே கண்டிப்பாக வழங்க வேண்டும்.

### SEND நடைமுறை விதிகளின்படி:

உள்ளூர் நிர்வாக அமைப்புகள் தங்கள் பொறுப்பில் உள்ள SEN அல்லது ஊனங்கள் உடைய குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள் மற்றும் SEN அல்லது ஊனங்கள் உடைய இளம்பருவத்தினருக்கு அவர்களுடைய SEN அல்லது ஊனங்களுடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும். இதில் உடல்நலம் மற்றும் சமூக கவனிப்பு தொடர்பான விவரங்களும் அடங்கும். இதில் தனிப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை எடுத்துக் கொள்ளுதல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு உள்ளடங்க வேண்டும். குழந்தைகள் மற்றும் குடும்பத்தினர் சட்டம் 2014-இல் பகுதி 3-இல் உள்ள தங்கள் கடமைகளை செய்வதுடன் கூடுதலாக, உள்ளூர் நிர்வாக அமைப்புகள் முடிவுகளில் பங்கேற்பதற்கு அத்தியாவசியமான தகவல்கள் மற்றும் ஆதரவை குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் மற்றும் இளம்பருவத்தினருக்கு வழங்குவதற்கும் அதிக முக்கியத்துவம் தர வேண்டும். (2.1)

இதன் பொருள், ஒவ்வொரு உள்ளூர் நிர்வாக அமைப்பும், இலவசமான, அணுகுவதற்கு எளிதான மற்றும் ரகசியங்களைக் காக்கும் தன்மை கொண்ட சேவையை வழங்க வேண்டும், இதன் மூலம் குழந்தைகள், பெற்றோர் மற்றும் இளம்பருவத்தினர் தங்கள் வாழ்க்கையை மாற்றும் முடிவுகளை எடுக்கும்போது உதவ வேண்டும்.

இந்தச் சேவைக்கு உள்ளூர் நல்கை (Local Offer) என்று பெயர், பெற்றோர்கள், குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கு அளிக்கப்படும் தகவல்கள், ஆலோசனை மற்றும் ஆதரவின் மூலங்களின் விவரங்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் மற்றும் எப்படி இவை அளிக்கப்படுகின்றன என்ற விவரமும் இருக்க வேண்டும்.

## நாங்கள் சார்பற்றவர்கள் என்று சொல்லும்போது என்ன பொருளில்

### SEND நடைமுறை விதிகள் கூறுவது:

தகவல்கள், ஆலோசனை மற்றும் ஆதரவு பாகுபாடற்றதாகவும், உள்ளூர் நிர்வாக அமைப்பு மற்றும் மருத்துவ கமிஷனிங் குழுக்கள் ஆகியற்றின் மூலமாக போதுமான இடைவெளியுடன் வழங்கப்பட வேண்டும் (2.8)

இதன் பொருள் நாங்கள் வழங்கும் தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு கண்டிப்பாக சட்டத்திற்கு உட்பட்டதாகவும், **SEND நடைமுறை விதிகளின்படியும்** அமைந்திருக்கும் என்பதாகும்.

உள்ளூர் நிர்வாக அமைப்பின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் உள்ளூர் பள்ளிகள் மற்றும் பிற அமைப்புகளில் உள்ள கொள்கை மற்றும் நடைமுறைகள் பற்றி பாகுபாடற்ற தகவல் மற்றும் ஆலோசனைகளை நாங்கள் வழங்குகிறோம்.

ஏதேனும் ஒரு வகை குறைபாடு, ஊனம் அல்லது சிறப்புக் கல்வித் தேவை போன்றவற்றுக்கு நாங்கள் முன்னுரிமை அளிப்பதில்லை அதேபோல கல்விக்கான ஏதேனும் ஒரு குறிப்பிட்ட அணுகுமுறையையும் நாங்கள் முன்னிறுத்துவதில்லை.

## நாங்கள் சார்பற்றவர்கள் என்று எப்படி எங்களுக்குத் தெரியும்?

ஏதேனும் ஒரு சார்புநிலைக்கு சென்று விடுதல் எளிதானது. எல்லா விஷயங்களைப் பற்றியும் எல்லோருக்கும் ஏதோவொரு கருத்து இருக்கும்! சில நேரங்களில் தாங்கள் சார்பு நிலையில் இருப்பதை மக்கள் உணர்வதே இல்லை.

அதனால்தான், எங்களுடைய தகவல்கள், ஆலோசனை மற்றும் ஆதரவு பற்றிய உங்கள் கருத்துகளை நாங்கள் மிகவும் மதிக்கிறோம். நாங்கள் சார்புடையவர்களாக இருக்கிறோம் என்று நினைத்தால், அதை நீங்கள் தெரிவிக்க வேண்டுமென விரும்புகிறோம். நாங்கள் சார்பற்றவர்களாக இருப்பதை உறுதிசெய்து கொள்ள, நாங்கள் அடிக்கடி எங்கள் சேவைகளைப் பயன்படுத்தும் நபர்களிடம் நாங்கள் ஏதேனும் வகையில் சார்புடையவர்களாக இருக்கிறோமா என்று கேட்கிறோம்.

WS SEND IAS-இல் நாங்கள், சார்பற்ற தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்குவதில் தேசிய அளவிலான தரநிலைகளைப் பின்பற்றுகிறோம். இந்தத் தரநிலைகளை, நெட்வொர்க் ஆஃப் இன்ஃபர்மேஷன், அட்வைஸ் அண்ட் சப்போர்ட் உருவாக்கியுள்ளது. இது நாங்கள் வழங்கும் சேவையின் செயல்திறனைக் கண்காணிக்க உதவுவதோடு, அது உள்ளூர் நிர்வாக அமைப்பிடமிருந்து 'போதுமான இடைவெளியுடன்' நடத்தப்படுகிறதா என்பதையும் உறுதிசெய்ய முடியும். இதன் மூலமாக, நாங்கள் சுதந்திரமான வகையிலும், சார்பற்ற நிலையிலும் செயல்படவும் செயல்படுகிறோம் என்று அறியப்படவும் முயலுகிறோம், எங்கள் பகுதியில் உள்ள உள்ளூர் நிர்வாக அமைப்பு அல்லது மருத்துவ கமிஷனிங் குழு ஆகியவற்றின் எந்தவொரு தாக்கம் அல்லது கட்டுப்பாடும் இல்லாமல் செயல்பட, செயல்படுகிறோம் என்று அறியப்பட விரும்புகிறோம்.

WS SEND IAS வழிகாட்டுதல் குழுவையும் கொண்டுள்ளோம், இது நாங்கள் திறம்பட செயல்படுகிறோமா என்றும், எங்களுக்கான சார்பின்மை மற்றும் ரகசியம் காத்தல் கொள்கைகளைப் பின்பற்றுகிறோமா என்றும் கண்காணிக்கிறது. இந்த வழிகாட்டும் குழுவில் உள்ளவர்கள், பெற்றொர்களும் தொழில்முறைப் பணியாளர்களுமே. மேலும் இந்தக் குழுவுக்கு சுதந்திரமான ஒரு தலைவரும் உண்டு; தற்போது இந்தத் தலைமை **வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் பெற்றோர் கவனிப்பாளர் மன்றத்தின்** தலைமை பொறுப்பின் கீழ் உள்ளது.

எங்களுடைய **சார்பின்மை கொள்கையை** எங்கள் இணையதளத்தில் காணலாம்.

## என்னென்ன தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவை நாங்கள் வழங்குகிறோம்?

சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும் ஊனம் தொடர்பான, துல்லியமான, புத்தம்புதிய மற்றும் சார்பற்ற வளங்கள் மற்றும் தகவல்களை நாங்கள் வழங்குகிறோம். இதில் பின்வருவன அடங்கும்:

- கல்வி, உடல்நலம் மற்றும் சமூக கவனிப்பு.
- தேசிய மற்றும் உள்ளூர் கொள்கை.
- உள்ளூர் நல்கைகள்.
- உங்கள் உரிமைகளும் விருப்பத் தேர்வுகளும்.
- நீங்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புகள்.
- உதவி மற்றும் ஆலோசனையை நீங்கள் பெறக்கூடிய இடங்கள்.
- இந்த ஆதரவு அமைப்பை அணுகும் முறை.

எங்கள் **இணையதளம்**, வெளியீடுகள், பயிற்சி நிகழ்வுகள் மற்றும் கூட்டங்கள் ஆகியவை உட்பட பல வழிகளில் நாங்கள் தகவல்களை வழங்குகிறோம்.

சில நேரங்களில் தகவல்கள் மட்டுமே போதுமானதாக இருக்காது. நீங்கள் தகவல்களைச் சேகரித்து, அதைப் புரிந்து கொண்டு, அதை உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப பயன்படுத்த விரும்பக் கூடும். இதை நாங்கள் ஆலோசனை என்று அழைக்கிறோம், மேலும் இந்தச் சேவையை மின்னஞ்சல், தொலைபேசி அழைப்பு, நேரடியாகப் பேசுதல் மற்றும் குழுக்களுடன் செயலாற்றுதல் அல்லது பயிற்சி ஆகிய வழிகளில் வழங்குகிறோம்.

உங்களுக்குத் தேவைப்பட்டால் இன்னும் தீவிரமான ஆதரவையும் வழங்கவோம். இதில் கடிதங்கள் தொடர்பாக உதவுதல், உங்களுடன் சந்திப்புகளில் கலந்து கொள்ளுதல் அல்லது உள்ளூர் நிர்வாக அமைப்பு, பள்ளி அல்லது பிற அமைப்புகளுடன் நீங்கள் விவாதம் செய்யும்போது உங்களுக்கு ஆதரவளித்தல் ஆகியவை அடங்கும். உங்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு **தனிப்பட்ட ஆதரவாளர்** அல்லது தன்னார்வலரை நீங்கள் கண்டறிய நாங்கள் உதவ முடியும்.

எங்களால் உதவ முடியவில்லை என்றால், உதவக் கூடிய பிறக் குழுக்கள் அல்லது நிறுவனங்களைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க அல்லது அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி தர அல்லது அவர்களின் தொடர்பை உங்களுக்குத் தர எங்களால் முடிந்த அளவுக்கு செயல்படுவோம். நாங்கள் இதை வழி சுட்டுதல் (signposting) என்கிறோம்.

## இந்தச் சேவையில் ரகசியம் காக்கப்படுமா?

நாங்கள் பகிர்ந்து கொள்ளலாம் என்று நீங்களாக சொல்லும் வரை உங்கள் விவரங்களை யாருடனும் பகிர்ந்து கொள்ள மாட்டோம். உங்கள் குழந்தையின் பாதுகாப்பு தொடர்பாக எங்களுக்கு குறிப்பிடத்தக்க கவலை ஏதேனும் ஏற்படுவது மட்டுமே இதற்கு ஒரே விதிவிலக்காக இருக்கக்கூடும்.

எங்கள் இணையதளத்தில் எங்கள் **ரகசியதன்மை கொள்கையை** நீங்கள் காணலாம்.

TAMIL